# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

**OS. No.152/2022**

சாட்சி -PW1

பெயர் -திரு. ஆனந்தன்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.08.2026.**

வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**குறுக்கு விசாரணை**

நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தேன். 2004ல் இருந்து ஒரு 15 வருடமாக ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தேன். நான் எந்த பைனான்ஸ்சிலும் பங்குதாரராக இல்லை. பிரதிவாதியுடைய பக்கத்து நிலம் என்னுடையது. பிரதிவாதியை எனக்கு 15 வருடமாக தெரியும். பிரதிவாதி என்னிடம் கடனாக பணத்தை 2019ல் கேட்டார். 10.12.2019 ல் பணம் கொடுத்தேன். பணம் கொடுக்கும் போது பிரதிவாதியின் மாமா ராமமூர்த்தி உடன் இருந்தார். அப்போது வாசு என்னுடன் இருந்தார்.

பணத்தை என்னுடைய வீட்டிலேயே வைத்து கொடுத்தேன். பணம் எப்போதும் நான் கையில் வைத்திருப்பேன். என் மகள் கேட்டு வாங்கி கொடுத்தேன். பிரதிவாதியின் மீது இந்த தாவாவை தவிர வேறு தாவா ஏதும் தாக்கல் செய்யவில்லை. வேறு எந்த நீதிமனற்த்திலும் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிக்கு எனது மகளிடம் பணத்தை வாங்கி கொடுத்ததை பிராதில் சொல்லவில்லை. பிரதிவாதி பத்து பத்து லட்சத்திற்கு இரண்டு பாண்டு எழுதி கொடுத்ததால் தாக்கல் செய்துள்ளேன். ஜெயகுமார் என்னுடைய நிலத்திற்கு பக்கத்தில் வேலை செய்பவர்.

அசல் வழக்கு எண்.96/2018 குடியாத்தம் சார்பு நீதிமன்றத்தில் பிரதிவாதியின் மீது கிரைய ஒப்பந்த வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரி. அந்த வழக்கு சமாதானமாக முடிக்கப்பட்டது என்றால் சரி. இந்த வழக்கில் நான் சொத்திற்காக பிரதிவாதிக்கு பணம் கொடுத்திருந்தால் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டு இருப்பேன் என்றால் சரி. பிரதிவாதிக்கு 500 ரூ கட்டுகளாக கொடுத்தேன். பிரதிவாதிக்கு பணம்

மதியத்திற்கு மேல் கொடுத்தேன். இந்த வழக்கில் சாட்சி வாசு பாண்டை தயாரித்துள்ளார் என்றால் சரி. பிரதிவாதிக்கு பணம் கொடுக்கும் போது சாட்சி வாசு தவிர வேறு யாரும் இல்லை. பிரதிவாதிக்கு பணம் கொடுத்த பிறகு தான் பாண்டு எழுதினேன்.

2018ல் கிரைய ஒப்பந்தம் செய்து வழக்கு தாக்கல் செய்திருந்த போது 2019ல் மீண்டும் பிரதிவாதிக்கு பணம் கொடுக்க வேண்டிய அவசியமே இல்லை என்றும் வழக்கிற்காக நான் பிரமசரி நோட்டை தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியும் என்னிடம் எந்த கடனும் பெறவில்லை என்றும், நான் எந்தவித கடனுறுதி சீட்டும் எழுதவில்லை என்றால் சரியல்ல. எனது மருமகன் பிரதிவாதிக்கு கொடுத்த கடன் ரூ.50,000/- க்காக பிரதிவாதி என் மருமகனுக்கு எழுதிக் கொடுத்த புரோநோட்டை வைத்து பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மருமகனை பிரதிவாதிக்கு யார் என்றே அவருக்கு தெரியாது.

பிரதிவாதியின் வங்கி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்றால் சரி. தாவா கடனுறுதி சீட்டிற்கும் பிரதிவாதிக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிக்கும் ஏற்கனேவே வழக்கு இருந்த போது நான் பிரதிவாதிக்கு கடன் கொடுக்க வாய்ப்பே இல்லை என்று சொன்னால் சரியல்ல.

The Witness deposed on solemn affirmation and typed to my dictation in open court and read over the same to the witness and admitted by the witness to be correct, on this day the 11th day of August 2026.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2026.08.11 02:17:20 +0600

Additional District Judge(FTC),
Vellore.